# கிறிஸ்தவம்

## தரம் 1

## முதலாம் தவணை



## ஆசிரியர் வழிகாட்டி

முன் பிள்ளை அபிவிருத்தி மற்றும் ஆரம்பநிலைக் கல்வி திணைக்களம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

# கலைத்திட்டக் குழு

**ஆலோசனை:**

**பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரண** அவர்கள் பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
கலாநிதி தர்ஷன சமரவீர அவர்கள், பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞுதன பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**மேற்பார்வை**

திருமதி. ஆர்.எம்.கே. த சில்வா அவர்கள், பணிப்பாளர், முன்பிள்ளை
அபிவிருத்தி மற்றும் ஆரம்பநிலை கல்வி திணைக்களம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட இணைப்பாளர்:**

திருமதி. லக்மாலி ஆனந்தகொட, உதவி விரிவுரையாளர,
தேசிய கல்வி நிறுவகம்.

**எழுத்தாளர் குழு:**

திருமதி. எம். ரதீகா சமன்தி மென்டிஸ், பரி. தோமா கல்லூரி, கல்கிசை
திருமதி. எஸ்.இ.பி.சீ. பிரனாந்து, வெஸ்லி கல்லூரி, கொழும்பு 8.
திருமதி. எம்.ஐ.என்.எப். சேனாரத்ன, ஆசிரியர் ஆலோசகர், (கிறிஸ்தவம்)
கல்வி திணைக்களம், நீர்கொழும்பு.
திருமதி. காமன் சகுந்தலா ரொட்றரிகோ, ஶ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.
திருமதி. ஹிரன்தி சஜீவனி பெரேரா, பிஷ்ப் கல்லூரி, கொழும்பு 03
திருமதி. அருணி இந்திகா பெரேரா ஜயதுங்க, பிஷ்ப் கல்லூரி, கொழும்பு 03

**சரவைநோக்கு:**

கௌரவ ரோஹித த சில்வ. தேவகெதிலும, வெளிவாரி விரிவுரையாளர்
இலங்கை இறைவியல் கலைகூடம், பிலிமதலாவ

**தமிழாக்கம்**

திருமதி. எம். பி. செல்வநிதி பெரேரா, ஆசிரியர் ஆலோசகர், (ஓய்வுநிலை)

**சித்திரம் - அட்டைப்படம்:**

திரு. ஐ.எம்.எம்.பி. இலங்கோன,
பரி. தோமா கனிஷ்ட பாடசாலை, கொழும்பு 03
திரு. டீ. கே. எம். ஹெட்டிகே. வெஸ்லி கல்லூரி, கொழும்பு 09

**கனணி வடிவமைப்பு**

ரட்ணராஜா தனுஷா, வரைகலை வடிவமைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

## பாட உள்ளடக்கம்


**எண்ணக்கரு - நடத்தை அபிவிருத்தி**

பாடம் 1 - கடவுள் படைத்த உலகம்

பாடம் 2 - சமாதானத்தின் மகன் இயேசு

பாடம் 3 - தூயாவியின் வருகை

**எண்ணக்கரு - கலாச்சாரம் ஒழுக்கவியல் மற்றும் சமூக நல்லிணக்கம்**

பாடம் 4 - இது எமது ஆலயம்

**எண்ணக்கரு - சுற்றாடல் நல்லிணக்கம்**

பாடம் 5 - உலகத்தைப் பாதுகாப்போம்

**எண்ணக்கரு - நல்வாழ்வு நற்பண்பு கொள்கைகள்**

பாடம் 6 - இயேசுவுடன் கதைப்போம்

பாடம் 7 - கடவுள் அருளிய எனது குடும்பம்

**எண்ணக்கரு - உளமும் உடலும் நல்வாழ்வும்**

பாடம் 8 - கடவுளை வணங்குவோம்.
கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம்.

## அறிமுகம் - சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி - ஆரம்ப நிலை

பல்வேறுபட்ட சமூகத்தில் கலாச்சாரத்தின் வகையில் சமயம் கற்பித்தல் உணர்வு பூர்வமான இணக்கப்பாட்டுக் காரணி ஆகும். பல்வேறு சமயங்களில் தத்துவ ரீதியாகவும் மற்றும் பிரயோகம் காரணமாகவும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதனால் பிரதானமாக அவர்களின் நிருவாக அமைப்பிலும் பல சமய செயற்பாடுகள் காரணமாக அவர்களை தனி மேடைக்கு கொண்டு வருதல் கடினமானது. தேசிய பொருளாதாரத்துக்கும் அபிவிருத்திக்கும் இணக்கப்பாட்டுக்கும் அது அச்சுறுத்தலாக செல்வாக்கு செலுத்துகின்றது. எனவே வேறு பிரவேசத்தில் செயற்படுதல் தேசிய தேவையாகும். அதற்கேற்ப தேசிய கல்விக்கு சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்விக்கு உதவும் வழிமுறைகளைக் எடுத்துக் காட்டுதல் தேசிய பாடத்திட்டத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வியின் இறுதியான நோக்கம் பிள்ளைகளின் வயதுக்கு சமமான வகையில் சமயக் கல்வியை வழங்குதல் ஆகும். எந்த சமயத்தை சார்ந்தவர்களாக இருந்தாலும் தலைஇ இதயம்இ கை, மனம் என்பனவற்றுடன் இணைந்து மனப்பான்மையில் விருத்தி பெற்று எதிர்கால உலகத்தை வெற்றியுடன் ஆக்கபூர்வமான நபரை சமூகத்துக்கு வழங்குதல் அவசியமாகும்.

முக்கியமான சமூக - சமய எண்ணக்கருக்கள் ஐந்தின் கீழ் கட்டியெழுப்பிய சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்விக்கான பாடத்திட்டக் கோவையானது ஆன்மீக விருத்திக்கும் தனிநபர் விருத்திக்கும் அவசியமான திறமைகளை வலுப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கேற்ப பாடத்திட்ட கோவையில் எதிர்கால சவால்களுக்கு ஊக்கத்துடனும் துணிவுடனும் முகம் கொடுக்கும் செயற்திறன் உள்ள நபரை சமூகத்துக்கு கொடையாக அளிபதற்கு தேவையான அடித்தளம் பாலர் கல்வியிலிருந்து கட்டியெழுப்புதல் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப நிலைக் கல்வி தொடர்பாக கிறிஸ்தவம் பாடத்திட்டம் தயாரிப்பில் கற்கும் மாணவரின் வயது, முதிர்வு, மொழி, திறன், விருப்பம், பற்று என்பனவற்றில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொருத்தமான கற்றல் பேறுகளைப் பெறுவதற்காக நடைமுறை வாழ்வு செயற்பாடுகளில் ஈடுபடும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்டுள்ளது.

சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்வி - ஆரம்ப பாடசாலை கல்வியானது கிறிஸ்தவ பிள்ளையின் சமய உணர்வுகளின் நோக்கமானது நம்பிக்கையின் மகழ்ச்சியானது கிறிஸ்துவுக்கு சொந்தமாகுதல் ஆகும். அனைத்து நன்மைகளும் தந்தையால் கிடைக்கின்றன என்பதை அறிந்து கொள்வதனால் நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தோன்றுகின்றன. இங்கு விருப்படன் கடவுளுக்கு நன்றி செலுத்தவும் விண்ணப்பம் செயவதிலும் ஈடுபட வேண்டும். மேற்படி நோக்கத்தைப் போன்று கடவுளின் படைப்பான சுற்றாடலைப் பாதுகாத்தல், சமய வழிபாடுகளுக்கு பழக்கப்படுதல், ஒழுக்கமுடன் வாழ்தல் போன்ற காரணிகள் குறித்த அவதானங்களில் இந்த பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரின் வாழ்வுக்கு முன்மாதிரியாக அமையும் வகையில் கிறிஸ்துவில் வாழ்வைக் கட்டியெழுப்புதல் ஆசிரியரின் கடமையாகும். அனைத்து ஆசிரியர்களும் நேர அட்டவணையை ஒழுங்காக செயற்படுத்தினால் மாணவர்களுக்க பிரமாணிக்கமான கற்றல் சூழல் அமைபபுக்கு வழிகாட்டும்.

### கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள்

ஆரம்ப வகுப்புகளில் கிறிஸ்தவ பாடம் கற்பித்தலில் சிறு பிள்ளைகள் விரும்பும் சமய வாழ்வு மற்றும் செயற்பாடுகள் பயன்படுத்தப்பட வேண்டும். தேவ பிதா அருளிய கொடைகள் அழகிய உலகம், அன்பு, பாதுகாப்பு போன்றனவைகளை அனுபவத்தில் காண்பதற்கு ஏற்றவாறு திட்டமிடப்படுதல் அவசியம். அதேபோன்று ஆலயம் செல்லுதல், வழிபாடுகளில் ஈடுபடுதல், சமய செயல்களில் ஈடுபடுதல், கிறிஸ்தவ பத்தைக் கட்டியெழுப்புதல் இவற்றில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. திருவிவிலியத்தின் கதைகள மற்றும் தூய ஆவியானவரின் பண்புகள் இயேசுவின் வாழ்வின் நற்பண்புகளுக்கு முன்னுதாரணமாக விளங்குகின்றன.

இவை தொடரபாக பாடல், நடித்தல், சித்திரம் வரைதல் போன்ற செயற்பாடுகளிலும் மாணவர் ஈடுபடுவ-தில் அவதானம் செலுத்த வேண்டும். அப்போது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் இரசனையாகவும் அழகிய அனுபவமாகவும் அமையும். மாணவரிடம் கிறிஸ்தவ பாடத்தைக் கற்கும் ஆர்வம் உருவாகும் என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

**பாடசாலை கொள்கைகள் மற்றும் வேலை திட்டங்கள்**

பாடசாலைக் கலாச்சாரம் மற்றும் வேலைத் திட்டங்களீல் கிறிஸ்தவ பாடநெறிக்கு பொருத்தமான எண்ணக்கருக்களை கட்டியெழுப்பும் புதிய ஆக்கம் குறித்து அதிபர்கள் விசேட அவதானம் செலுத்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆரம்ப பாடசாலைகளில் செயற்படுத்தப்படும் சமய வேலைத்திட்டங்கள் இவைகளில முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் தரம் 1 இல் எளிமையாக ஆரம்பித்து தரம் 5 வரை படிப்படியாக முன்னேற்றம் அடையச் செய்தல் விரும்பத்தக்கது. இதனால் மாணவர் பல துறைகளிலும் இணைந்து செயல்படும் தன்மை உருவாகும்.

ஆசிரியர் வாரத்துக்கு ஒருமுறை மாணவரை ஆலயத்துக்கு அழைத்து செல்ல வேண்டும். ஆலயத்தில் நடைபெறும் வழிபாடு மூலமாக மாணவரில் ஆன்மீக தன்மை உருவாகும். இந்த செயலால் சபை மக்கள் - அருட்பாணியாளர் தொடர்பு வளர்ச்சி அடைகின்றது. நல்லதொரு சமூகம் உருவாக்கப்படவும் இது காரணியாக அமையும்.

நபரின் தூய்மை, நேர்மை, கருணை, இரக்கம், சமத்துவம், நட்பு, ஒத்துழைப்பு, ஒற்றுமை போன்ற நற்பண்புகளினால் பாடசாலை கலாச்சாரம் போசனை அடையும். அவ்வாறான கலாச்சாரத்தில் சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தில் எதிர்பார்க்கும் அத்தியாவசிய கற்பித்தல் எண்ணக்கரு உறுதிப்படுதல் எளிதாகும். இவ்வாறான நிலைப்பாடு ஏற்படும் வேளையில் பாடத்தில் கற்றவைகள் அனைத்தும் நடைமுறை பாவனையில் பயன்படுத்தும் தேவை உருவாகும்.

**கணிப்பீடு செய்தல்**

ஆரம்ப தரங்களில் எழுத்துப் பரீட்சை கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். அவதானிப்புக்கள், ஆராய்தல், சிறப்பான துறைகள், பயணங்கள், அபிநயம், நாடகம், பொம்மலாட்டம், கலந்துரையாடல், வாய்மொழி வினாக்கள் போன்ற மதிப்பீட்டு முறைகளையும் பயன்படுத்துதல் விரும்பத்தக்கது.


**சமயம் மற்றும் ஒழுக்கவியல் பாடத்தின் நோக்கம்**

நிலையான சமாதானத்துக்கான விருத்தயை கண்முன்னே தோற்றுவிப்பதற்கு வேறுபாடுகளை மதிக்கும் சிந்தனைகளையும் சனநாயகத்தையும் நீதியையும் மதித்து வாழும் குடிமகனை உலகதில் ஆக்கம் செய்தல் ஆகும்.

**சமயம் மற்றும் ஒழுக்கவியலைக் கற்பிப்பதன் நோக்கம்**

1. நீதி, நேர்மை, ஒழுக்கம, சிந்தனைமிக்க குடிமகனை உருவாக்குதல்.
2. மனித நேயத்தின் அடிப்படையில் பல்வேறு பாரம்பரிய பழக்கவழக்கங்களையும் வழிபாடுகளையும் மதித்து வாழ்தல்.
3. எமது சூழலில் காணப்படும் வேறுபாடுகளை தர்க்கரீதியாக ஏற்று மதித்து சமூக சகவாழ்வை மேம்படுத்தல்.
4. உள் சமாதானம் மற்றும் ஆன்மீக மகிழ்ச்சியை அனுபவித்தல்.
5. தனிப்பட்ட நபர்களுக்கும் பலவிதமான சமூகத்திலும் உடல் ஆரோக்கியத்தை விருத்தி செய்தல்.
6. சமூகம் - கலாச்சாரம் - சுற்றாடல் உணர்வுகளுக்கு பங்களிப்பு வழங்கி சவால்களில் நேர்மறையாக செயலாற்றுதல்.

# சமயம் மற்றும் ஒழுக்கவியல் கல்விக்கு அவசியமான எண்ணக்கருக்கள்



| சமயம் மற்றும் ஒழுக்க கல்வியின் பிரதான எண்ணக்கருக்கள் | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | எந்தவொரு சவாலையும் வெற்றி கொள்வதற்கு ஆற்றலுடன் கூடிய நேர்சிந்தனையை போசணைப்படுத்துவது போன்று உடல் உளம் சமூகம் சார்ந்த சிந்தனைகள் நிறைந்த ஆளுமை விருத்தியுடைய நபரை உருவாக்குதல். |
| சமூக கலாச்சார நல்லிணக்கம் | சமயம் மற்றும் கலாச்சாரம் பேதங்கள் இன்றி அனைவருடனும் சுமூகமாகவும் நடந்து ஏற்றுக்கொள்வது போன்று பிற சமூக சலாச்சார பின்னணி குறித்து இணக்கப்பாட்டுடன் செயற்படும் ஆற்றல். |
| சூழல் நேயம் | சுற்றாடல் இணக்கம் மூலமாக ஒருவர் தமது சுற்றாடல் குறித்த தகவல்களை அறிந்து கொள்வதற்கும் தயாரிப்பதற்கும் உள்ள ஆற்றலை விபரிப்பர். அது அனைத்து சமய நோக்குகளுக்கும் வழி காண்பதற்கான பிரதான வழிமுறை ஆகும். ஆற்றுகைக்கான நியதியாக அமைவது நபர் ஒருவருக்கு பல்வேறு சுற்றாடல் நிலைகளின் வளர்ச்சிக்கு துணையாக இருத்தல். |
| கண்ணியம், ஒழுகலாறு மற்றும் இணக்கப்பாடு | நிலையான சமூக நல் வாழ்வுக்கு அவசியமானதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான சமூகம் மற்றும் கலாச்சாரப் பெறுமதி, சமயப் பெறுமதிகள், கொள்கைகள், அறநெறிகள், ஒழுக்கம், இணக்கம் என்பனவற்றைப் பின்பற்றி வாழ்வை வடிவமைத்தல். |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | உடலையும் உளத்தையும் சமமாக வைத்திருப்பதில் பக்கம் சாராது ஆரோக்கிய வாழ்வுக்காக எப்போதும் நல்ல நினைவுகளுடன் வாழ்தல். |

| சமயம் மற்றும் ஒழுக்கவியல்<br>ஆரம்ப நிலை கல்வி தொடர்பான எண்ணக்கருக்களின் விபரங்கள | |
|---|---|
| நடத்தை மேம்பாடு | ஆசிரியர் மற்றும் மூத்தவர்களின் வழிகாட்டுதலின் கீழ் “சமயம்” எனும் எண்ணக்கருவை அறிந்து தமது சரிதை மற்றும் நடத்தையை சரியான வடிலவமைத்துக் கொள்ளும் எளிய சமய செயற்பாடுகளில் ஈடுபடுவர். |
| சமூக கலாச்சார நல்லிணக்கம் | வாழும் பல்சமய சூழலில் காணப்படும் சமய அடிப்படையில் இடம்பெறும் விழாக்கள், ஆடை ஆபரணங்கள், வணக்கம் தெரிவித்தல் போன்றன குறித்த அனுபவங்களைப் பெற்று கலாச்சார வேறுபாடுகளின் அடிப்படையில் அனைவருடனும் ஒத்துழைப்புடன் செயற்படுவர். |
| சூழல் நேயம் | வாழ்வானது சுற்றாடலுடன் ஒன்றிணைந்து காணப்படும் முறைகளை சமயம் மூலமாக அறிந்து சுற்றாடல் குறித்த இணக்கப்பாட்டுடன் செயற்படுவர். |
| கண்ணியம், ஒழுகலாறு மற்றும் இணக்கப்பாடு | சமயங்களுக்கு பொருத்தமான விதம் இடம்பெறும் பாரம்பரியங்கள் மற்றும் புனித யாத்திரைகள் செய்தல் என்பனவற்றின் சிறப்புக்களை அறிந்து செயற்படுவர். சமய தலங்களுக்கு பொருத்தமான ஆடை ஆபரணங்கள் அணிவர். சரியான நடத்தைகளுடன் செயற்படுவர். |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | நாளாந்த செயல்களை கருத்துடன் (Mindfully) செய்வதற்கு பழக்கமும் பயிற்சியும் பெற்று தமது செயல்களை சிக்கலின்றி மகிழ்வுடன் செயற்படுத்துவர். மனரம்மியமான நாளாந்த நடத்தைக் கோலத்துக்காக ஆரோக்கியமான சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்து வாழ்வர். |

| தரம் 1 - சமயம் மற்றும் ஒழுகலாறு பாடச் சட்டகம் | | | |
|---|---|---|---|
| **எண்ணக்கரு** | **கற்றல் பேறு** | **செயலாற்றல் தர நியமங்கள்** | **கணிப்பீட்டு நியதி** |
| நடத்தை மேம்பாடு | 1. நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற முக்கியமான சமய வழிபாட்டு ஒழுக்க விதிமுறைகளையும் சமய அடிப்படையில் தமது அறநெறி பற்றிய எண்ணக்கருக்களையும் இனங்காண்பார். | 1.1 சமயம் தொடர்பான விசேட சந்தர்ப்பங்களில் கலந்துகொண்டு அனுபவம் பெறுவார். | 1.1.1 பங்குபற்றுதல் |
| | | 1.2 சமயநெறி தொடர்பான விசேட அனுட்டான வழிமுறைகளைப் பொருத்தமான வேளையில் பிரயோகிப்பார். | 1.2.1 விசேட சமய அனுட்டானங்களை இனங்காணல்.<br><br>1.2.2 ஏற்ற சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தல். |
| | | 1.3 சமயநெறி தொடர்புபட்ட பிரதான குறியீடுகள் மற்றும் சின்னங்களை இனங்காண்பார். | 1.3.1 குறியீடுகள், சின்னங்களை இனங்காணல். |
| | | 1.4 சமய பாடம் பற்றிய விளக்கம் பெற்று அதனைப் பிரயோகிப்பார். | 1.4.1 சமய பாடநெறி தொடர்பாக விளக்கமாக அறிந்து கொள்ளல்.<br><br>1.4.2 சமய பாடத்தைப் பிரயோகித்தல் |
| | 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு /சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பார். | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1. சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | | 2.2 சமயம் சார்ந்த கதைகளை அடிப்படையாகக் கொண்டு சமய அறிஞர்களின் விசேட பண்புகளைக் கூறுவார். | 2.2.1 விசேடமான பண்புகளைக் கூறுதல். |
| | | 2.3 சமயம் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுதல். |
| | | 2.4 விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்களை விளங்கிக்கொண்டு அதனை செவிமடுத்துத் தாளத்துடன் இசைப்பார். | 2.4.1 விவிலியத்தில் உள்ள உபதேச காவியங்களுக்குச் செவிமடுத்தல்<br><br>2.4.2 தாளத்துக் கேற்றவாறு பாடுதல் |
| | | 2.5 விவிலிய உபதேச காவியங்களை அடிப்படையாகக் கொண்டு பெற்றுக்கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவார். | 2.5.1 முன்மாதிரியைக் கூறுதல் |
| சமூக, கலாசார நல்லிணக்கம் | 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவமான முறையில் நடந்துகொள்வார். | 3.3.1 சமயத்-தலங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் குறிப்பார். | 3.1.1 இடங்களை இனங்காணல்.<br><br>3.1.2 இடங்களைப் பெயர் குறித்தல் |
| | | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக் கேற்ப நடந்துகொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கேற்ப நடத்தையை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்<br><br>3.3.2 உடல் அவயவங்களை உரியவாறு பயன்படுத்தல். |
| | 4. சமயம் மற்றும் கலாசார நிகழ்வுகளில் பங்குபற்றி அவை தொடர்பான அனுபவங்களைப் பெறுவார். | 4.1 விசேட சமய நிகழ்வுகளில் வினைத்திறனுடன் பங்குகொள்வார். | 4.1.1 வினைத்திறனுடன் பங்குபற்றுதல் |
| | | 4.2 விசேட கலாசார நிகழ்வுகளில் செயலூக்கத்துடன் பங்குகொள்வார். | 4.2.1 செயலூக்கத்-துடன் பங்குபற்றுதல் |
| | | 4.3 விசேட சமய அல்லது கலாசார நிகழ்வு ஒன்றை முன்மாதிரியாகச் செய்து காட்டுவார். | 4.3.1 செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br><br>4.3.2 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br><br>4.3.3. சிறந்த ஆக்கபூர்வமான ஆற்றல்<br><br>4.3.4 உபகரணங்களை உரியவாறு பயன்படுத்தல் |
| கண்ணியம், ஒழுகல-ாறு மற்றும் இணக்கப்பாடு | 5. புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுரீதியான விதிமுறைகளையும் பழக்க வழக்கங்கை-ளயும் சீரான முறைய-ில் பின்பற்றுவார். | 5.1 புனித தலங்களில் அனுசரிக்க வேண்டிய மரபுகள், விதிமுறைகள் மற்றும் பழக்கவழ க்கங்களை இனங்காண்பார். | 5.1.1 சரியான பழக்க வழக்கங்களைக் கூறுதல்<br><br>5.1.2 விதிமுறைகளை முறையாகக் கூறுதல். |
| | | 5.2 சரியான விதிமுறைகள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு அமைவாகச் செயற்படுவார். | 5.2.1 நடவடிக்கை மேற்கொள்ளல் |

| | | | |
|---|---|---|---|
| | 6. சமய அனுட்டானங்களில் ஈடுபடும்போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத் தையும் அவயங்களின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | 6.1 சமய அனுட்டானங்களில் ஈடுபடும்போது சீரான பழக்கவ-ழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1. உரியவாறு வழி-முறைகளில் ஈடுபடு-தல். |
| | | 6.2 சமய அனுட்டானங்களில் ஈடுபடும்போது விதிமுறைகளை ஏற்றவாறு மேற்கொள்வார். | 6.2.1 முறையான பழக்கவழ க்கங்களை மேற்கொள்ளல். |
| | | 6.3 சமய அனுட்டானங்களில் ஈடுபடும்போது சரியான அவயங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிக்காட்டுவார். |
| | | 6.4 சமய நடவடிக் கைகளின்போது உரிய முறையில் பொருத்தமான வார்த்தைகளைப் பிரயோகிப்பார். | 6.4.1 சிறப்பான சொற்பிரயோ கத்தைப் பயன்படுத்துவார். |

| | | | |
|---|---|---|---|
| | 7. ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | 7.1 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல் |
| | | 7.2 ஒரு சிறந்த பிள்ளையென்ற வகையில் கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களை இனங்காண்பார். | 7.2.1 சரியாக முறையில் நற்பண்புகளை அறிந்து இனங்காணல் |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளையென்றவகையில் தமது நடவடிக்கைகளை கொள்வார். | 7.2.1 செம்மையான நடத்தையை மேற்கொள்ளல். |
| | | | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |
| சூழல் நேயம் | 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்ப தற்காகச் செயலாற்றுவார். | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல் |
| | | 8.2 தமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்<br>8.2.2 ஆக்கபூர்வமான திறன்<br>8.2.3 உபகரணப் பயன்பாடு<br>8.2.4 மதிப்பளித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 9. சமய அறிஞர்கள் மற்றும் ஞானிகள் இயற்கையின் பெறுமானத்தை மேலோங்கச் செய்த விதம் பற்றி அறிந்து கொண்டு அதற்கேற்றவாறு செயலாற்றுவார். | 9.1 கதைகள் / கவிதைகளை அடிப்படையாகக் கொண்டு இயற்கையின் பெறுமானத்தை இனங்காண்பார். | 9.1.1 அவதானமாகச் செவிமடுத்தல்<br>9.1.2 தெளிவாக விளங்கிக் கொள்ளல்<br>9.1.3 கருத்துக்களை வெளிப்படுத்தல் |
| | | 9.2 சுற்றாடல் வளங்களைச் சிறந்தமுறையில் சிக்கனமாகப் பயன்படுத்துவார். | 9.2.1 சிக்கனமான முறையில் பயன்படுத்தல் |
| | | 9.3 உயிரினங்களை அன்பு செய்வார். | 9.3.1 அன்பு செய்தல் |
| | | 9.4 உயிரினங்களுக்கு ஆகாரம் வழங்குவார். | 9.4.1 ஆகாரம், பானம் ஆகிய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் |
| பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை | 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசைக் கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்கு முறையில் கூறுதல் |
| | | 10.2 சிறந்த சுகாதாரப் பழக்கங்களைக் கடைப்பிடிப்பார். | 10.2.1 சிறந்த சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரித்தல் |

| | | | |
|---|---|---|---|
| | 11. அன்றாட நடவடிக்கைக ளின்போது அறிவுத்தெளிவுடன் சுயாதீனமாகச் செயற்படுவார். | 11.1 நடக்கும்போது அறிவுத்தெளியுடன் சுயாதீனமாக நடப்பார். | 11.1.1 அறிவுத் தெளியுடன் சுயாதீனமாக நடத்தல் |
| | | 11.2 நடக்கும்போது அடிப்பாதத்தில் உணருகின்ற மென்மை - வன்மை, ஈரம்- வரட்சி, சூடு - குளிர் என்பவற்றை உணர்ந்து நடப்பார். | 11.2.1 மென்மை- வன்மை, ஈரம் - வரட்சி, சூடு - குளிர் ஆகியவற்றை உணர்ந்து அறிந்து கொள்ளல். |
| | | 11.3 எளிமையான முறையில் தியானத்தில் (Meditation) ஈடுபடுவார். | 11.3.1 உடல் அவயங்களின் பயன்பாட்டை சீரான முறையில் மேற்கொள்ளல். |
| | | | 11.3.2 அதனை ஏற்றவாறு பிரயோகித்தல் |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# பாடம் 1 - கடவுள் படைத்த உலகம்

கடவுள் உலகத்தின் படைப்பாளரும் பாதுகாவலரும் என்பதை உறுதிப்படுத்தி கடவுள் படைப்புக்களை அறிந்து நன்றி கூறி பாதுகாப்பதற்கு ஈடுபடுத்தல் இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்திலுள்ள உபதேசக் காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | உலகத்தின் படைப்பாளர் கடவுள் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |
| | | 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள்**

- திருவிவிலியம் தொ.நூ. 1:1-31கூகடவுள் படைத்த உலகின் பல்வேறு படங்கள் கூசிறுவர் வேதா-கமம், A4 தாள், கத்தரிக்கோல், பசை



- முழு உலகத்தையும் படைத்த கடவுளுக்கு நன்றி செலுத்துவோம்.
- கடவுள் படைத்த உலகம் அழகானது.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு**

**படிமுறை 1**

- மாணவர்களை பாடசாலை தோட்டத்துக்கு அழைத்து செல்லுங்கள். பிள்ளைகளுடன் தோட்டத்தில் பயணம் செய்து சுற்றாடலில் காணப்படுபவைகளைக் குறித்து கலந்துரையாடுங்கள். கலந்துரையாடலில் வானம், புவி, சூரியன், மரங்கள், பூக்கள், பறவைகள், மிருகங்கள் குறித்து அவதானம் செலுத்துங்கள்.
- சுற்றாடலில் காணப்படாத வானம், புவி, கடல், நதி போன்றவைகளை படங்கள் மூலமாகக் காட்டுதல் சிறந்தது.
- இவைகளை கடவுள் படைக்கும் முன்னர் புவியானது வெறுமையாக இருந்தது என்பதைக் குறிப்பிடுங்கள்.
- வானத்தைக் காட்டி அங்கு காணப்படுபவைகளைக் கலந்துரையாடுங்கள்.
- இரவில் வானத்தில் காணப்படுபவைகளைக் கலந்துரையாடுங்கள். நிலா, நட்சத்திரங்கள்
- நாம் வாழும் புவியில் காணப்படுபவைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.
- புவியில் வளரும் தாவரங்கள் இல்லாமல் நாம் வாழ்வது சிரமம் என்பதை அறிவுறுத்துங்கள். நாம் வாழ உணவு, நீர், வளி என்பன அவசியம் என்பதை சுருக்கமாக குறிப்பிடுங்கள்.
- கடல், நதி, வாவி, குளம் என்பனவற்றிலிருந்து மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் தண்ணீர் கிடைக்கின்றது என்பதை அறிவுறுத்துங்கள்.
- கடல், நதி, வாவி, குளம் போன்றனவற்றில் நீர் வாழ் உயிரினங்கள் வாழ்கின்றன என்பதை அறிவியுங்கள்.
- ஆகாயத்தில் பறக்கும் பறவைகளும் புவியில் ஊர்வனவும் உள்ளன என்பதை குறிப்பிடுங்கள்.
- இவைகள் எல்லாவற்றையும் படைத்தவர் கடவுள் என்பதை அறிவுறுத்துங்கள்.

**படிமுறை 2**

- உலக படைப்பின் விபரங்கள் திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளைக் கேட்பதற்கு இடமளியுங்கள். மாணவர் அமருவதற்கான இருப்பிடங்களை ஆயத்தம் செய்யுங்கள்.
- மாணவருக்கு கேடகும் விதமாக திருவிவிலியம் தொ.நூ. 1:1-31 வரை வாசியுங்கள்.

**படிமுறை 3**

- கடவுள் இவைகள் அனைத்தையும் ஆறு நாட்களில் படைத்தார். கடவுளின் படைப்புக்கள் அழகானவை. இவ்வாறு திருவிவிலியத்தில் எழுதப்பட்டுள்ளது என்பதில் மாணவரின் அவதானத்தைச் செலுத்துங்கள்.
- மேற்படி கதையிலிருந்து வாய்மொழி வினாக்கள் சில கேளுங்கள்.

படிமுறை 4

- கடவுள் படைத்த உலகம் குறித்த பாடலைப் பாடுங்கள்.
- கடவுள் படைத்த உலகத்துக்கும் அதிலிருந்து கிடைக்கும் பயன்களுக்கும் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

**கணிப்பீடு:**

| **மதிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு நியம இல** | **தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர்** | | **தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை** | |
|---|---|---|---|---|---|
| | | **நிலை 4** | **நிலை 3** | **நிலை 2** | **நிலை 1** |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 3 இற்கு பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 2 இற்கு பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்கள் 1 இற்கு ஒரு மாணவரின் துணையுடன் பதிலளிப்பர். | படைப்பின் கதையில் வாய்மொழி வினாக்களுக்கு பதிலளிக்க முடியாத நிலையில் இருப்பர். |
| 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் மேலும் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் என ஒரு மாணவரின் துணையுடன் கூறுவர். | கடவுள் எனக்காக அழகான உலகத்தை படைத்தார் எனக் கூற முடியாத நிலையில் இருப்பர். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு
# பாடம் 2 - சமாதானத்தின் மகன் இயேசு

| |
|---|
| இயேசு சமாதானத்தின் மகனாக உலகத்தில் தோன்றிய முறைகளை அறிந்து கொள்வது இந்த பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்திலுள்ள உபதேசக் காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | கடவுளின் சிரேஷ்டத்துவம் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |
| | | 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 முன்மாதிரிகளைக் கூறுவர். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் லூக்கா 1 26-38 மாட்டுத் தொழுவம் ஆக்கத்திற்கு தேவையான வைக்கோல்கூதுணி / கடதாசி, மாட்டுத் தொழுவம் உருவம்



**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1 - இயேசுவின் பிறப்பை பாத்திரமேற்று நடிப்பர்**

**பாத்திரமேற்று நடிப்பதற்கான முன் ஆயத்தம்**

- கிறிஸ்துவின் பிறப்பை நடித்துக் காட்டுவதற்கு பொருத்தமான பாத்திரங்களை பகிர்ந்து வழங்குங்கள்.

- (மரியாள், யோசேப்பு, இடையர், ஞானிகள், வானதூதர்)
- தமது சரிதைகளுக்குப் பொருத்தமான ஆடைகளைக் கொண்டு வருமாறு மாணவரிடம் முன் தினம் அறிவுறுத்துங்கள்.
- கிறிஸ்து பிறப்பு பாடலை பாடுவதற்கு பயிற்சி வழங்குங்கள்.

படிமுறை 1

- பாடலைப் குழுவினராகப் பாடுவதற்கு அல்லது ஒலிப்பதிவு நாடாவைக் கேட்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதே சந்தர்ப்பத்தில் நடிப்பதற்கும் இடமளியுங்கள்.
- மாட்டுத் தொழுவத்தில் மரியா, யோசேப்பு, தீவனத் தொட்டியில் இயேசு உருவங்களை வைத்தல்.
- பாடலில் குறிப்பிட்டவாறு இடையரும் ஞானிகளும் வந்து இயேசுவைப் பணிந்து கொள்வதை நடித்-தல்.

**பாத்திரமேற்று நடித்தல் அல்லது மாணவர் செயற்பாட்டு புத்தகத்தின் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடு-த்துங்கள்.**

படிமுறை 2

- திருவிவிலியம் லூக்கா 1(26-38 வாசியுங்கள்.
- இயேசுவின் பிறப்பு குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

  கலந்துரையாடலில் பின்வரும் கருத்துக்கள் வெளிப்பட இடமளியுங்கள்.

- இயேசு இறைமகன் என வலியுறுத்துங்கள்
- இயேசு மானிட மகனாக மரியாளிடம் பிறந்தார் என அறிவுறுத்துங்கள்.
- இயேசுவின் தூய்மை (லூக்கா 1:35)

  வானதூதர் அவரிடம் “தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக் குழந்தை இறைமகன் எனப்படும்.”

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 5 இணைப்புகளை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 3 இணைப்புக்களை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 2 இணைப்புக்களை சரியாக இணைப்பர். | இயேசுவின் பிறப்பின் கதைகளைக் கேட்ட பின்னர் செயற்பாட்டு புத்தகத்தின் 1 இணைப்பை சரியாக இணைப்பர். |
| 2.3 சமயக் சார்ந்த கதைகளில் வாயிலாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகளைக் கூறுவர். | 2.3.1 | இயேசு சமாதானத்தின் மகன் எனக் கூறுவர். | இயேசு சமாதானத்தின் மகன் என மேலும் கூறுவர். | இயேசு சமாதானத்தின் மகன் என ஒரு மாணவரின் துணையுடன் கூறுவர். | இயேசு சமாதானத்தின் மகன் எனக் கூற இடர்படுவார். |

# எண்ணக்கரு - நடத்தை மேம்பாடு

# பாடம் 3 - தூயாவியின் வருகை

தூயாவிளின் வருகையில் இயேசுவின் வாக்கு பெந்தகொஸ்தே நாளில் நிறைவேற்றப்பட்டது என்பதை அறிந்து நிகழ்வை உறுதிப்படுத்தி தூயாவியானவர் எப்போதும் எங்களுடன் வாசம் செய்கின்றார் என்பதை அறிந்து கொள்வது இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 2. சமய அறிஞர்கள் / சமயத் தாபகர்கள் தொடர்பான வரலாறு / சமயம் சார்ந்த கதைகள் மற்றும் விவிலியத்திலுள்ள உபதேசக் காவியங்கள் வாயிலாக நடத்தை மேம்பாட்டுக்கு ஏற்ற விசேட பண்புகளை இனங்காண்பர். | தூய ஆவியானவரின் சிரேஷ்டத்துவம் | 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்பார். | 2.1.1 சமயம் சார்ந்த கதைகளைச் செவிமடுப்பர். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் தி.ப. 2 ( 1- 4 , பெந்தகொஸ்தே நாள் நிகழ்வின் படங்கள். கூநிறப் பென்சில், A4 தாள்கூகத்தரிக்கோல், பசை, பிரிஸ்டல் மட்டை, மின் விசிறிய, இணைப்பு 1 உம் 2 உம்

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- கிறிஸ்தவர் நாம் கொண்டாடும் விழாக்களை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விழாக்கள் குறிதது மாணவரின் கருத்துக்களை விமரிசியுங்கள்.
- வகுப்பறைக்குள் வீசும் காற்றின் அனுபவத்தைப் பெற இடமளியுங்கள்"
- மாணவரின் அனுபவங்களை கலந்துரையாடுங்கள்.

**படிமுறை 2**

- இணைப்பில் காணப்படும் படத்தை வெட்டி தயாரியுங்கள்.
- மாணவர் படத்தை ஆராய்ந்து பார்ப்பதற்க சந்தரப்பம் வழங்குங்கள்.
- மாணவர் பார்த்தவைகளை கேட்டறியுங்கள்.

- மாணவரின் கருத்துக்களை வரிசைப்படுத்துங்கள்.

- திருவிவிலியப் பகுதியை உரத்து வாசியுங்கள்"

- வாசித்த திருவிவிலியப் பகுதியை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

- காற்றினால் கிடைத்த அனுபவம் திருவிவிலியப் பகுதியின் நிகழ்வு குறித்து மாணவரின் கருத்-தக்களை விமரிசியுங்கள்.

படிமுறை 3

- திரும்பவும் பிள்ளைகள் படத்தை ஆராய்ந்து பார்க்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- கலந்துரையாடலுக்குப் பின்னர் படத்துடன் தொடர்பானங திருவிவிலியப் பகுதியிலிருந்து பின்வரும் வாய்மொழி வினாக்களை மாணவரிடன் வினவி விடைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

1. சீடர்கள் கூட்டம் கூடியிருந்த இடம் எது?

2. அவர்க் என்ன செய்து கொண்டிருந்தார்கள்.

3. அப்போது இடம் பெற்றது என்ன?

மேற்படி கருத்துக்கள் வெளிப்படுமாறு மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டவாறு சிததிரம் வரையும் சந்தர்ப்பத்தீல் வகுப்பறையில் முன்வையுங்கள்.

படிமுறை 4

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தை நிறம் தீட்டுவதற்கு உதவி செய்யுங்கள்.

படிமுறை 5

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தை வெட்டி ஒட்டி நிறைவு செய்வதற்கு உமக்கு வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு ஏற்ப நிறைவு செய்ய மாணவருடன் செயற்பாட்டில் ஈடுபடுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 2.1 சமயம் சார்ந்த கதைகளை விருப்புடன் செவிமடுப்-பார். | 2.1.1 | பெந்தகோஸ் -தே நாள் நி-கழ்வுகளை சரியாகக் கூறுவர். | பெந்தே-காஸ் -தே நாள் நிகழ்வு-களை ஓரளவு சரியாகக் கூறுவர். | பெந்தகோஸ் -தே நாள் நி-கழ்வுகளை சக மாணவரின் துணையுடன் கூறுவர். | பெந்தகோஸ் -தே நாள் நி-கழ்வுகளை சரியாகக் கூற இடர்படுவார். |

**இணைப்பு 01**








இணைப்பு 02

நிறம் தீட்டுவோம். வெட்டுவோம். ஓட்டுவோம். நெற்றிப் பட்டம் செய்வோம். அணிவோம்.




ஆசிரியருக்கான ஆலோசனை -

- தீ சுடரை நிறம் தீட்டுங்கள்.
- நெற்றிப்பட்டத்தை பிரிஸ்டல் மட்டையில் ஒட்டுங்கள்.
- பின்வருமாறு தீ சுடரை staple செய்யுங்கள் அல்லது இளாஸ்டிக் பட்டி பயன்படுத்துங்கள்.



**தூய ஆவியானவர் உங்களிடம் வரும்போது நீங்கள் வல்லமை பெறுவீர்கள்.**

# எண்ணக்கரு - சமூக, கலாச்சார நல்லிணக்கம்

# பாடம் 4 - இது எமது ஆலயம்

கிறிஸ்தவ சமயத்தின் புனித தலம் ஆலயம் என்பதை அறிந்து ஆலயம் செல்லும் போது பொருத்தமான ஆடை ஆபரணங்கள் அணிந்து மற்றும் சம்பிரதாயக் கொள்கைகளைப் பின்பற்றி பிறருடன் ஒத்துழைப்புடனும் மரியாதையுடனும் செயற்பட்டு தேவையான செயல் அறிவைப் பெற்றுக் கொடுத்தல் இந்தப் பாடத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 3. சமய வணக்கத் தலங்களை இனங்கண்டு அவை பற்றி அறிந்து அங்கு கௌரவ-மான முறையில் நடந்து கொள்வார். | இது எமது ஆலயம் | 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்வார். | 3.2.1 சமய அறநெறிக்கு ஏற்ப நடத்தையை மேற்கொள்ளல். |
| | | 3.3 பொருத்தமான ஆடையணிகளை அணிந்து கண்ணியமான முறையில் உரையாடலைக் கையாள்வார். | 3.3.1 சரியான முறையில் செம்மையாக உரையாடுதல்.<br>3.3.2 உடல் அவையவங்களை உரியவாறு பயன்படுத்தல். |

**கற்றல் வளங்கள்:**

- ஆலயம் கொண்டு செல்வதற்கு தேவையான பொருட்கள்
- பாடசாலை காலை வழிபாட்டுக்கு அவசியமான பொருட்கள்
- **கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**
- **செயற்பாடு 1 நாம் ஆலயம் செல்வோம்**

**ஆலயம் செல்வதற்கு முன்னர் ஆயத்தம்**

- அதிபருடன் கலந்துரையாடி ஆலயம் செல்லும் பயணத்தை ஒழுங்கு செய்யுங்கள்.
- ஆலயத்துக்கு மாணவரை அழைத்து செல்லும் நாளை அருட்தந்தை / அருட்பணியாளருக்கு அறிவித்து அனுமதி பெற்றுக் கொள்ளுங்கள்.
- ஆலயம் செல்வதற்கு பொருத்தமான ஆடை ஆபரணங்களுடன் வருமாறு மாணவருக்கும் பெற்றோருக்கும் அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- ஆலயத்துக்கு செல்லும் முன்தினம் ஆலயத்தில் நடந்து கொள்ளும் விதி முறைகளை (அமைதி நிலை) அறிவுறுத்துங்கள்.
- சரியான முறையில் ஆலயத்திலிருந்து புறப்பட்டு வெளியே செல்லுங்கள்.

**ஆலயம் சென்ற பின்னர்**

படிமுறை 1

- ஆலயத்தின் நுழைவாசலில் பாதரட்சைகள்/ தொப்பிகள் கழற்றி வையுங்கள்.
- ஆலயத்துக்குள் அமைதியாகச் சென்று உடகாருவதற்கு வழி காட்டுங்கள்.
- ஆசிரியர் முன்மாதிரியாக நடந்து கொள்ளுங்கள்.
- பாடல்கள் பாடும் வேளையில் எழுந்து நிற்குமாறு அறிவுரை கூறுங்கள்.
- விண்ணப்பங்களில் கலந்து கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- விண்ணப்ப வேளைகளில் முழந்தாளில் அமர்ந்து இரு கைகளையும் கூப்பி கண்களை மூடி விண்ணப்பம் செய்யுமாறு ஆலோசனை வழங்குங்கள்.
- விண்ணப்பத்தின் முடிவில் ஆமென் கூறுவதற்கு நினைவு படுத்துங்கள். ஆசிரியர் உரத்து ஆமென் எனக் கூறுங்கள்.
- அருளுரை / இறைசெய்தி அவதானத்துடன் கேட்குமாறு அறிவுறுத்துங்கள்.
- விண்ணப்பம் செய்த பின்னர் அமைதியாக ஆலயத்திலிருந்து புறப்பட்டு செல்லுமாறு வழியுறுத்துங்கள்.

படிமுறை 2

- ஆலய அனுபவங்களை கூறுவதற்கு மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆலயத்தில் செய்யக்கூடாத செயல்கள் குறித்து கலந்துரையாடுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 3.2 சமய வணக்கத் தலங்களில் உரிய விதிமுறை களுக்கு ஏற்ப நடந்து கொள்வார். | 3.2.1 | ஆலயத்தில் துதியுடன் பாடல்களைப் பாடுவர். | ஆலயத்திற்கு வரும் பிள்ளையுடன் சேர்ந்து பாடல்களைப் பாடுவர். | ஆலயத்தில் துதியுடன் பாடல்களைப் பாடுவதற்கு தயக்கம் காட்டுவர். | துதி செலுத்தி பாடல்கள் பாடத் விருப்பம் காட்ட மாட்டார்கள். |
| 3.3 பொருத்தமான ஆடையணி-களை அணிந்து கண்ணியமான முறையில் உரையாட லைக் கையாள்வார். | 3.3.1<br>3.3.2 | விண்ணப் பத்தின் முடிவில் ஆமென் எனக் கூறுவர். | விண்ணப்பத்-தின் முடிவில் ஆமென் என பொதுவாகக் கூறுவர். | விண்ணப்பத்தின் முடிவில் ஆமென் கூறுவதற்கு தயக்கம் காட்டுவர். | விண்ணப்பத்தின் முடிவில் ஆமென் கூற மாட்டார்கள். |

# எண்ணக்கரு - சூழல் நேயம்
# பாடம் 5 உலகத்தைப் பாதுகாப்போம்

| |
|---|
| கடவுள் படைத்த அழகான உலகத்தைப் பாதுகாத்து ” விருத்தி செய்து அதன் பயன்களை பயன்படுத்த ஈடுபடுத்தல் இப் பாடத்தின் நோக்கம் ஆகும். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 8. தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைத் தூய்மையாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்காகச் செயலாற்றுவார். | கடவுளின் அழகிய உலகம் | 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்பதில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 செயலூக்கத்துடன் பங்குபற்றுதல். |
| | | 8.2 எமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்காகவும் வைத்திருப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 8.2.1 எண்ணங்களை வெளிப்படுத்தல்.<br>8.1.2 ஆக்கபூர்வமான திறன்<br>8.2.3 உபகரணங்கள் பயன்பாடு<br>8.2.4 மதிப்பளித்தல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம் தொ.நூ.1:28-29கூ பாடத்துக்கு பொருத்தமான படங்கள்
- வெளியே வீசி எறியப்படும் கோப்பை ஒன்றில் செடி நடுவதற்கு அவசியமான பொருட்களை ஆயத்தம் செய்து கொண்டு வாருங்கள். அல்லது அவ்வாறான படத்தைக் காட்டுங்கள்.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

**படைப்பின் கடவுள் என்ற கடந்த பாடத்தை நினைவுறுத்தி கலந்துரையாடுங்கள்**

- உலகத்தின் படைப்புக்களைப் படைத்தவர் யார்?
- கடவுள்

சுற்றாடலின் அழகு, பூக்களின் நிறங்கள், இலை வடிவங்கள், பழங்கள், கீரை வகைகள், குருவிகளின் ஒலி, பறக்கும் பறவைகள் போன்றனவைகளைப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள். அல்லது படங்களைக் காட்டுங்கள்.

படிமுறை 2

- மாணவர் பார்த்தவைகள் கேட்டவைகள் குறித்து கலந்துரையாடுங்கள்.
- அவைகளின் அழகு ஏற்பட்ட மகிழ்வு குறித்து கலந்துரையாடுங்கள்.
- அழகிய உலகத்தை பாதுகாத்து பராமரித்து விருத்தி அடையச் செய்யும் பொறுப்பை மனிதரிடம் கடவுள் ஒப்படைத்தார்.
- மனிதரை ஏதேன் தோட்டத்தில் குடியமர்த்தி ஆசிகள் பல வழங்கி மகிழ்வுடன் வாழ வழிவகுத்தார்.
- அதுமட்டுமல்ல படைபபின் பயன்களை பெற செய்தார்.
- திருவிவிலியம் 1:28-29 ஆசிரியர் உரத்த சத்தமாக வாசியுங்கள்.

கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி

"பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்பன்.

**அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்.**

**கடல் மீன்கள் வானத்துப் பறவைகள்**

**நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன**

**அனைத்தையும் ஆளுங்கள் என்றார்.**

**அப்பொழுது கடவுள் மண்ணுலகெங்கும் உள்ள**

**விதை தரும் செடிகள் பழமரங்கள் அனைத்தையும்**

**உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன்.**

**இவை உங்களுக்கு உணவாகட்டும்."**

படிமுறை 3

- கடவுள் படைத்த அழகிய உலகத்தைப் பாதுகாத்தல் மனிதரின் பொறுப்பு அல்லவா?
- நாம் அழகிய உலகத்தைப் பாதுகாத்து எமது கடமைகளை நிறைவேற்றுவது எப்படி?
- சிறுவர் நாம் உலகத்தை பாதுகாப்பதற்கு எங்கள் பங்களிப்பை வழங்க முடியும்.
- அழகிய உலகத்தை பாதுகாக்கும் அருள் தருமாறு கடவுளிடம் மன்றாடுவோம்.

படிமுறை 4

**அழகிய உலகத்தைப் பாதுகாப்பதற்கு பின்வரும் முறைகளைப் பின்பற்றுங்கள்.**

- எமது வீடு மற்றும் சுற்றாடலை சுத்தப்படுத்தல்.
- எமது பாடசாலை மற்றும் சுற்றாடலை சுத்தப்படுத்தல்.
- பொலிதீன் பை பாவனையை தவிர்த்தல்.
- மண்ணில் உக்காத பொருட்களை வேறுபடுத்தல்.
- நீரையும் மின்சாரத்தையும் சிக்கனமாகப் பாவித்தல்.
- உணவை வீணாக்காமல் அளவுடன் பகிர்ந்து உணவருந்தல்.
- பூக் கன்றுகளுக்கு நீர் ஊற்றுவதற்கு உதவி செய்தல்.

- விண்ணப்பம் செய்தல்

**மாணவர் செயற்பாட்டு புத்தகம் தொடர்பான ஆலோசனை:**

- கடவுள் படைத்த அழகிய உலகத்தின் படத்தைக் காட்டுங்கள்.
- மாணவர் அதேபோன்ற சித்திரத்தை வரைய வழிகாட்டுங்கள்.
- கோப்பையில் நடப்பட்ட செடிகளைக் காட்டுங்கள். அல்லது மாணவருடன் சேர்ந்து தயார் செய்யுங்கள்.
- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் திருவிவிலியப் பகுதியை வாசியுங்கள்.

பாடல்: **அபிநயத்துடன் பாடுங்கள்.**

**1. எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா**
**என்றென்றும் நான் பாடுவேன்**
**இந்நாள் வரை என் வாழ்விலே**
**நீர் செய்த நன்மைக்கே**

**2. வானாதி வானங்கள் யாவும்**
**அதன் கீழுள்ள ஆகாயமும்**
**பூமியில் வாழ்கின்ற யாவும்**
**கர்த்தா உம்மைப் போற்றுமே**

**3. காட்டினில் வாழ்கின்ற யாவும்**
**கடும் காற்றும் பனித் தூறலும்**
**நாட்டினில் வாழ்கின்ற யாவும்**
**நாதா உம்மைப் போற்றுமே**

**4. நீரினில் வாழ்கின்ற யாவும்**
**நிலத்தின் ஜீவராசியும்**
**பாரினில் பறக்கின்ற யாவும்**
**பரனே உம்மைப் போற்றுமே**

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 8.1 தம்மைச் சூழவுள்ள சுற்றாடலைச் சுத்திகரிப்ப-தில் பங்களிப்புச் செய்வார். | 8.1.1 | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு ஓரளவு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு சிறிதளவு பங்களிப்பு வழங்குவர். | பாடசாலை சுற்றாடலை சுத்தம் செய்வதற்கு பங்களிப்பு வழங்கங்கு வதற்கு இடர்படுவார். |
| 8.2 எமது சுற்றுச் சூழலை அழகாகவும் ஒழுங்கா-கவும் வைத்திருப்ப-தற்கு ஏற்ற நடவடிக் கைகளை மேற்கொ ள்வார். | 8.2.1<br>8.2.2<br>8.2.3<br>8.2.4 | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப் படுத்துவர். | பாடசாலை சுற்றாடலில் ஒரு மாணவரின் துணையுடன் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப் படுத்துவர். | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப்படுத்த தயக்கம் காட்டுவர். | பாடசாலை சுற்றாடலில் பூக்கன்றுகள் வளர்த்து உரமிட்டு அழகுப்படுத்த இடர்படுவார். |

# எண்ணக்கரு - கண்ணியம், ஒழுகலாறு மற்றும் இணக்கப்பாடு

# பாடம் 6 - இயேசுவுடன் கதைப்போம்

| |
|---|
| இயேசு தனது வாழ்வில் விண்ணப்பம் செய்து வாழ்ந்தது போன்று எமது வாழ்வுக்கும் விண்ணப்பம் அவசியம் என எதிர்பார்க்கப்படுகின்றது. |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 6. சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சரியான விதிமுறையையும் உரிய பழக்கவழக்கத்தையும் அவயங்களின் பயன்பாட்டையும் வெளிப்படுத்துவார். | ஜெப வாழ்வு | 6.1 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சீரான பழக்கவழக்கங்களை மேற்கொள்வார். | 6.1.1 உரியவாறு வழிமுறைகளில் ஈடுபடுதல். |
| | | 6.3 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சரியான அவயங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 உடல் பயன்பாட்டை சீரான முறையில் வெளிகாட்டுவார். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம்
- பாடத்துக்கு பொருத்தமான படங்கள் விண்ணப்பம் செய்யும் படம் மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் உள்ளது.
- விண்ணப்பம் தொடர்பான பாடலை ஆயத்தம் செய்து பாடுங்கள்.
- திருவிவிலியப் பகுதி மாற்கு 6:46

**"அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்."**

- இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படத்தை காட்சிப் படுத்துங்கள். (படம் மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் உள்ளது.

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் படத்தைக் கண்டு பிடிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- படத்தைக் குறித்து மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அனைத்து மாணவரும் கருத்துக்களை கூறுவதற்கு இடமளியுங்கள்.

- ஆலயத்தில் கரங்களைக் கூப்பி கண்களை மூடி முழந்தாளில் நின்று விண்ணப்பம் செய்ய வேண்டும் என அறிவுறுத்துங்கள்.

- எமக்கு விண்ணப்பம் செய்வதற்கு இடம் அவசியமா?

**படிமுறை 2**

- திருவிவிலியப் பகுதியை வாசியுங்கள்.

- "அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்."

**இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படத்தைக் காட்சிப்படுத்துங்கள்.**

- நாம் எமது வாழ்வில் எந்த இடங்களிலிருந்தும் விண்ணப்பம் செய்யலாம் என்பதை அறிவுறுத்துங்கள்.

(அமைதியான மனதுடன் ஆண்டவரிடம் மன்றாடல் செய்யலாம் என்பதை கூறுங்கள்.)

(விண்ணப்பம் செய்யும் வழிமுறைகளை சில உதாரணங்களுடன் விளக்கி சுறுங்கள்.)

**உதாரணம்:**

| | |
|---|---|
| வெளியிடம்: | அழகிய உலகத்தைப் படைத்த கடவுளே! உமக்கு நன்றி. |
| பஸ் பயணத்தில்: | பஸ்ஓட்டுநரின் திறமையால் எங்களைக் காப்பாற்றும் கடவுளே! |
| | பஸ் ஓட்டுநரை வழிநடத்தியருளும் கடவுளே! |
| பயணத்தில்: | நாம் பயணம் செயவதற்கு கிடைத்த தருணத்துக்கா நன்றி. |
| | எங்களை பாதுகாத்து வழிநடதியருளும். |
| பாடசாலையில்: | எங்கள் நண்பர்களுக்கு உதவி செய்வதற்கு அருள் தாரும். |
| வீட்டில்: | அம்மா அப்பா அனைவருக்கும் கீழ்படிந்து வாழ வரம் தாரும். |

**படிமுறை 3**

**எமது வாழ்வுடன் விண்ணப்பங்களை இணைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிவுறுத்துங்கள்.**

1. முதலாவது துதி செலுத்தல்
2. எமது தவறுகளுக்கு கடவுளிடம் மன்னிப்பு கேட்டல்.
3. பிரச்சனைகளில் இருந்து பாதுகாப்பு வழங்க வேண்டுதல்.
4. எமது நாளாந்த தேவைகளைக் கேட்டல்.
5. நோயாளருக்காக மன்றாடுதல் செய்தல்.

**படிமுறை 4**

**மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் பாடத்துக்கு பொருத்தமான செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.**

**செயற்பாட்டு புத்தகம் தொடர்பான ஆலோசனைகள்:**

- பாடத்துக்கு பொருத்தமான செயற்பாட்டை கண்டுபிடிக்க வழிகாட்டுங்கள்.

● “அவர் அவர்களிடமிருந்து விடை பெற்றுக் கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார்.”

(இயேசு மலையிலிருந்து விண்ணப்பம் செய்யும் படம் செயற்பாட்டு புத்தகத்தில் உள்ளது)

● மாணவர் தமது கைகளை வைத்து அல்லது செயற்பாட்டு புத்தகத்தில் காணப்படும் படத்தை கடதாசியில் ஒட்டி அதில் ‘எனது ஜெபிக்கும் கரங்கள்’ என எழுதி நிறம் தீட்ட உதவி செய்யுங்கள்.

● விண்ணப்பம் தொடர்பான பாடலை ஆயத்தம் செய்து பாடுங்கள்.

**கணிப்பீடு:**

| **மதிப்பீட்டு நியதிகள்** | **கணிப்பீட்டு நியம இல** | **தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர்** | | **தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை** | |
|---|---|---|---|---|---|
| | | **நிலை 4** | **நிலை 3** | **நிலை 2** | **நிலை 1** |
| 6.1 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சீரான பழக்கவ-ழக்கங்களை மே-ற்கொள்வார். | 6.1.1 | விண்ணப்பம் செய்வர். | விண்ணப்பம் செய்வதற்கு முயற்சிப்-பார். | ஒரு மாண-வரின் துணையுடன் விண்ணப்பம் செய்வர். | விண்ணப்பம் செய்வதற்கு தயக்கம் காட்டுவார். |
| 6.3 சமய அனுட்டானங்களில் ஈடுபடும் போது சரியான அவயங்களின் பயன்பாட்டை வெளிப்படுத்துவார். | 6.3.1 | ● கைளைக் கூப்பி ● கண்களை மூடி ● முழந்-தாளில் இருந்து சரியான நிலைகள் 3 காட்சிப்படுத்-துவர். | ● கைளைக் கூப்பி ● கண்களை மூடி ● முழந்-தாளில் இருந்து சரியான நிலைகள் 2 காட்சிப்படுத்-துவர். | ● கைளைக் கூப்பி ● கண்களை மூடி ● முழந்தாளில் இருந்து சரியான நிலைகளை 1 காட்சிப்படுத்-துவர். | ● கைளைக் கூப்பி ● கண்களை மூடி ● முழந்தாளில் இருந்து சரியான நிலைகளைக் காட்சிப்படுத்த இடர்படுவார். |

# எண்ணக்கரு - கண்ணியம், ஒழுகலாறு மற்றும் இணக்கப்பாடு

# பாடம் 7 கடவுள் அருளிய எனது குடும்பம்

தமது குடும்ப அங்கத்தவர்களை இனம் கண்டு அவர்கள் காட்டும் அன்பையும் பாதுகாப்பையும் அறிந்து அவர்களுக்கு செய்யக் கூடிய நற்செயல்களை உணர்ந்து நல்ல பிள்ளையாக செயற்பட்டு வாழ பழக்கப்படுதல் இந்த பாடத்தின் நோக்கம் ஆகும்.

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 7. ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளையும் பழக்கங்களையும் பின்பற்றுவார். | வீட்டில் குடும்பம் | 7.1 ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 சிறப்பான நற்பண்புகளை அறிந்து அவற்றை இனங்காணல். |
| | | 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்ற வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 7.3.1 சீரான நடத்தையை கடைபிடித்தல். |

**கற்றல் வளங்கள்:**

- பெற்றோரும் பிள்ளைகளும் மகிழ்வுடன் இருக்கும் படம்.



**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- அம்மா அப்பா பிள்ளைகள் மகிழ்வுடன் கதைத்துக் கொண்டிருக்கும் நிழற்படத்தைக் காட்டி நாம் வாழும் எமது குடும்பம் குறித்து கலந்துரையாடுங்கள்.
- பெற்றோரைப் பாதுகாத்தல் அவர்களிடம் அன்பு காட்டுதல் அர்ப்பணிப்புடன் செயற்படுதல் போன்றனவைகளை கலந்துரையாடுங்கள்.

- பெற்றோர் எங்களைப் பாதுகாத்து எமது தேவைகளை எல்லாம் நிறைவேற்றுகின்றனர் என்பதை விமரிசித்து அறியுங்கள்.
- திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடவுளின் கட்டளையான பெற்றோரை மதித்து வாழ்தல் எமது பொறுப்பு என்பதை விபரமாக எடுத்துக் கூறுங்கள்.
- சிறு வயது முதல் பெற்றோருக்கு கீழ்படிந்து வாழும் முறைகளை விமரிசித்து அறியுங்கள்.

படிமுறை 2

- அன்பையும் பாதுகாப்பையும் வழங்கும் எமது சகோதரர் மற்றும் சகோதரிகள் கடவுளால் அருளப்பட்ட கொடைகள் என்பதை அறிவித்து கலந்துரையாடுங்கள்.
- தமது சகோதரர் சகோதரிகளிடம் உதவி கேட்கும் சந்தர்ப்பங்களை விமரிசித்து அறிந்து கொள்ளுங்கள்.
- அந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி சகோதரர் சகோதரிகளின் அன்பையும் வழங்கும் பாதுகாப்பையும் மதித்து வாழ பழக்கப்படுத்துங்கள்.
- தமது சகோதர சகோதரிகளுக்கும் உறவினர் சகோதர சகோதரிகளுக்கும் செய்யக்கூடிய உதவிகளை கலந்துரையாடுங்கள்.

படிமுறை 3

- பெற்றோருக்கும் சகோதரர் சகோதரிக்கும் நன்றி செலுத்தும் பாடலை சேர்ந்து பாடுங்கள்.

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 7.1 ஒரு சிறந்த பிள்ளை என்ற வகையில் கடைபிடிக்க வேண்டிய நற்பண்புகளை இனங்காண்பார். | 7.1.1 | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 3 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 2 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகள் 1 கூறுவர். | பெற்றோரின் பாதுகாப்பு போன்று உதவி செய்யும் முறைகளைக் கூறமாட்டார்கள். |
| 7.3 சிறந்த ஒரு பிள்ளை என்ற வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்வார். | 7.3.1 | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 3 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 2 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகள் 1 கூறுவர். | தமது சகோதரர் சகோதரிகளுக்கு உதவி செய்யும் முறைகளைக் கூறமாட்டார்கள். |

# எண்ணக்கரு - பலம், ஆரோக்கியம் மற்றும் நன்னடத்தை

# பாடம் 8 - கடவுளை வணங்குவோம். கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம்.

| |
|---|
| நாளாந்த வாழ்வின் நடத்தை தொடர்பாக ஆரோக்கியமான சுகாதார பழக்க வழக்கங்ளைக் பின்பறறுவர். |

| கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | செயலாற்றுகைத் தர நியமங்கள் | கணிப்பீட்டு நியமம் |
|---|---|---|---|
| 10. ஏற்புடைய அன்றாட நடத்தைக் கோலங்கள் தொடர்பாக சிறந்த சுகாதார பழக்கவழக்கங்களைக் கடைபிடிப்பார். | காலையில் கடவுளை வணங்குவோம். கடவுளின் வார்த்தைகளை வாசிப்போம். | 10.1 சிறந்த நடத்தைகளை வரிசை கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 ஒழுங்கு முறையில் கூறுதல். |

**கற்றல் வளங்கள்:**

- திருவிவிலியம்
- சிறுபிள்ளை முழந்தாளில் நின்று விண்ணப்பம் செய்யும் படம் (மாணவர் செயற்பாட்டு புத்தகத்தில் உள்ளது.)
- 1 தெசலோனிகக்ர் 5:17-18 கூதிருப்பாடல் 119:115” எபேசியர் 6:2
- இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்.
- எல்லா சூழ்நிலைகளிலும் நன்றி கூறுங்கள்.
- உன் தந்தையையும் தாயையும் மதித்து நட.
- பாயில் அல்லது தரையில் உடகாருங்கள்.
- இனிய ஓசை தரும் கருவிகள் பயன்படுத்துங்கள். (மவுத் ஓகன்இ புல்லாங்குழல்)

**கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள்:**

**செயற்பாடு 1**

**படிமுறை 1**

- மனதை இலகுபடுத்தும் செயற்பாடு தொடர்பாக வகுப்பறையில் ஆலயத்தில்இ வெளியான இடத்தில் தியான காலத்துக்கு இடத்தை ஆயத்தம் செய்யுங்கள்.
- இனிய ஓசையில் மாணவரின் அவதானத்தை ஈடுபடுத்துங்கள். (மாணவரின் அவதானத்தை ஆசிரியரில் வைத்துக் கொள்ளுங்கள்.

உடலை இலகுவாக வைத்து கணகளை மூடி இருக்கம் வண்ணம் அறிவுறுத்துங்கள்.

- இப்போது உங்கள் மனதை மூச்சு விடும் திசைக்கு கொண்டு வாருங்கள்.

- மூக்கு துவாரங்களில் மூச்சானது மேலும் கீழும் செல்லும் வண்ணமாக வைத்திருக்க முயற்சி செய்யுங்கள்.
- வேறு எவைகளையும் சிந்திக்காது மூச்சு எடுத்தலை மட்டும் நினைவுபடுத்துங்கள்.
- (2 அல்லது 3 நிமிடம் மூச்சை மேலும் கீழும் செய்வதற்கு ஆசிரியரின் அறிவுறுத்தல் அவசியம். ஒலி நாடாவை நிறுத்துங்கள். கண்களை திறவுங்கள்.)
- மாணவர் உணர்ந்தவைகளை கலந்துரையாடுங்கள்.
- கடவுளை வணங்குவோம்.

படிமுறை 2

(நல்மனதுடன் நம் கடவுளை வழிபட ஆயத்தமாகுவோம். முாணவர் கண்களை மூடி இருக்கும் வேளையில் நாளாந்த வாழ்வின் நடத்தைக் கோலத்தை நேரிமையான நடத்தை மற்றும் எளிமையான வார்த்தைகளைக் கேட்பதற்கான சில உதாரணங்கள் பின்வருமாறு:

- மீண்டும் இனிய ஒலி நாதத்தைக் கேட்டவாறு கண்களை மூட இடமளியுங்கள்.
- இயேசு எங்களுக்கு கூறியதற்கு ஏற்ப அயலவர்களுக்கு அன்பு காட்டுவோம். எமது நண்பர்களுக்கு உதவி செய்வோம்.
- பெற்றோருக்கு கீழ்படிவோம். வயோதிபருக்கு கீழ்படிவோம். குாலையில் எழுந்து ஆலயம் செல்வோம்.
- கடவுளை வழிபடு**வோம்.**
- இடைவிடாது இறை வேண்டுதல் செய்யுங்கள். நாம் விண்ணப்பம் செய்யும் போது முழந்தாளில் நின்று இரு கரங்களையும் கூப்பி கண்களை மூடி வேண்டுதல் செய்வோம்.
- இயேசு உங்களுடன் இருக்கின்றார். அவர் உங்களை நேசிக்கின்றார்.
- நாம் ஓய்வுநாள் பாடசாலை (வேதாகம பாடசாலை) சென்று திருவிவிலியத்தை வாசிக்க பழகுவோம்.
- இயேசு கற்பித்த கதைகளைக் கேட்டு நல்லவைகளை செய்து வாழப் பழகுவோம்.
- கண்களை திறப்பதற்கு இடமளியுங்கள்.

படிமுறை 3

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் காணப்படும் பாடத்துக்குப் பொருத்தமான படத்தைக் கண்டுபிடிக்க இடமளியுங்கள்.
- மாணவர் தமது கருத்துக்களை கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- விண்ணப்பம் செய்யம் படத்தைக் காட்டுங்கள். நாமும் விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பதை அறிவுறுத்துங்கள்.
- திருவிவிலிய வார்த்தைகள் சில கேட்பதற்கு இடமளியுங்கள்.
    - இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்.
    - அயலவரிடம் அன்பு காட்டுங்கள்
    - பெற்றோருக்கு கீழ்படிவோம்.
    - மாணவருடன் சேர்ந்து வாசியுங்கள்.

படிமுறை 4

**மாணவர் செயற்பாட்டு புத்தகம் தொடர்பான ஆலோசனை:**

- மாணவர் செயற்பாட்டுப் புத்தகத்தில் பாடம் தொடர்பான செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- படங்களைப் பார்த்து ஆசிரியருடன் சேர்ந்து வாசியுங்கள். உதாரணமாக -
- இடைவிடாது (இறைவனிடம்) வேண்டுங்கள்.
- (வயோதிபருக்கு) கீழ்படிவோம்.
- (பிறரில்) அன்பு காட்டுவோம்.
- இணைப்பில் காணப்படும் திருவிவிலியப் பகுதியை வெட்டி மாணவரின் புத்தகத்தில் ஒட்டுவதற்கு வழிகாட்டுங்கள். (மாணவர் செயற்பாட்டு புத்தகத்தில் உள்ளது.)

**கணிப்பீடு:**

| மதிப்பீட்டு நியதிகள் | கணிப்பீட்டு நியம இல | தேர்ச்சி மட்டத்துக்கு அண்மித்துள்ளனர் | | தேர்ச்சி மட்டத்தை அண்மிக்கவில்லை | |
|---|---|---|---|---|---|
| | | நிலை 4 | நிலை 3 | நிலை 2 | நிலை 1 |
| 10.1 சிறந்த நடத்தைகளை வரிசை கிரமமாக வெளிப்படுத்துவார். | 10.1.1 | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் எனக் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என ஓரளவேனும் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என ஒரு பிள்ளையின் உதவியுடன் கூறுவர். | நாளின் ஆரம்பத்தில் கடவுளை வழிபட வேண்டும் என கூற இடர்படுவார். |